ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# ஆற்றுப்படை நூல்களில் கலைஞர்களின் வாழ்வியலும் பண்பாடும்

**முனைவர்.கோ.விஜயலெட்சுமி,**
**உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை,**
**புனிதசிலுவை தன்னாட்சிக் கல்லூரி,**
**திருச்சிராப்பள்ளி-620 002**

5

**ஆய்வுச்சுருக்கம்:**

ஆற்றுப்படை இலக்கியங்கள் பண்டைத் தமிழரின் வாழ்க்கை, அரசியல், கொடை, புகழ், போர்த்திறம், கல்வி, கலை ஆகியவற்றை சுவைபட எடுத்துக் கூறுகிறது. பண்டைத் தமிழரின் கலைகளும், கலைஞர்களும் மிகச் சிறந்த இடத்தைப் பெற்றிருந்தனர். புறநானூற்றிலும், பதிற்றுப்பத்திலும் ஆற்றுப்படைப் பாடல்கள் இருப்பதைக் காட்டுகிறது. புத்துப்பாட்டில் இடம் பெறும் ஐந்து ஆற்றுப்படை நூல்கள் சிறந்த வழி காட்டும் நூல்களாக அமைந்துள்ளன. வுறுமையிலும் செம்மையைக் கடைப்பிடித்த சங்க காலத்துக் கலைஞர்களின் வாழ்வியலும் பண்பாடும் இக்கட்டுரையில் ஆராயப்படுகிறது.

**திறவுச்சொற்கள்**:

குடி--குலம், பாடினி- இசையில் வல்ல மகளிர், நுதல்- நெற்றி, கூத்தர்- நடனம் ஆடுபவர், கலிங்கம்-ஆடை, பாணர்- இசைக்கலையில் வல்லுநர், ஆற்றுப்படுத்துதல்- வழிப்படுத்துதல், பண்பாடு-பண்படுத்துதல்.

**முன்னுரை:**

செந்தமிழின் வனப்பிற்கும், வளத்திற்கும் சிறப்புச் சேர்க்கும் ஆற்றுப்படை இலக்கியம் தொன்மையும், வளமையும் உடையது. பண்டைத் தமிழரின் வாழ்வையும், வரலாற்றையும், பண்பாட்டையும் பிற்காலத்தமிழர் அறிந்து கொள்ள மிகவும் துணையாய் நிற்பது பாட்டும், தொகையும் என்று உரையாசிரியர்களால் குறிக்கப்படும் சங்க இலக்கியங்களே ஆகும். பண்பட்ட காலச்சூழலில் மக்களின் மகிழ்விற்காக பண்பாட்டு விழுமியமாகவும் விளங்குபவை கலைகளாகும். கலைகளைத் தனது தொழிலாகக் கொண்டு நிகழ்த்தி வரும் ஆளுமையாளர்களாக இருப்பவர்கள் கலைஞர்கள். கலைஞர்களின் வாழ்வியல் பண்பாட்டின் உச்சமாக விளங்கிய காலம் சங்ககாலம். தனித்தனிப் பாடல்களாக பாடப்பட்டவை பத்துப்பாட்டு எனும் தொகுதி உள்ளடங்கும். இதில் ஆற்றுப்படை இலக்கியங்களாக சுட்டப்படுபவை ஐந்து. ஆற்றுப்படை நூல்களில் கலைஞர்களின் வாழ்வியலையும் பண்பாட்டையும் திறம்பட விளக்குவது இக்கட்டுரையின் முதன்மை நோக்கமாகும்.

தொல்காப்பியமும் ஆற்றுப்படையும்:

‘ஆற்றுப்படை’ இலக்கியம் அன்றைய சமுதாயத்தில் தனி மனித வறுமை நிலையையும் பிறர் நலம் பேணும் பெற்றியையும் ஒரு சேரப் படம் பிடித்துக் காட்டும் இலக்கியத் தொழில் நுட்பமாகும்.

“கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும் ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீ
இச்சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்” (1)

என்பது தொல்காப்பியம் காட்டும் அக்கால ஆற்றுப்படை இலக்கணம் ஆகும்.

**ஆற்றுப்படை இலக்கணம்:**

பத்துப்பாட்டில் பெரும்பான்மை பெற்றதாக ‘ஆற்றுப்படை’ இலக்கியங்கள் உன்ளன. ‘பகிர்ந்து உண்டு பல்லுயிர் ஓம்புவோம்’ என்ற கோட்பாட்டைத் தமிழன் பேச்சளவில் அன்றி வாழ்க்கையில் பின்பற்றிச் செயல்படுத்தியவன் ஆவான். பொருளின்றி வாடும் வறுமை நிலையிலும், பொருளின்றி வறுமையில் வாடுபவனிடம் பரிவோடு பேசி, தக்க வள்ளலையும், மன்னனையும் குறிப்பிட்டு அவரிடம் சென்றால் உனது வறுமை தீரும் என்று நம்பிக்கை ஊட்டுகிறவனாகப் பரிசு பெற்றவன் இருந்திருக்கிறான் என்பதை ஆற்றுப்படை இலக்கியங்னள் வாயிலாக அறியலாம்.

தன்னை ஒத்த சகக் கலைஞரிடம் பொறாமை கொள்ளாமல் அன்பு கொண்டு தானாகவே சென்று பரிசில் கிடைக்கும் இடத்தைக் கூறி போக வழியும் சொல்லும் பண்பாடும், தான் பெற்ற செல்வத்தைப் பிறரது பசியைத் தீர்க்கக் கொடுத்து உதவும் ஈகையையும் காண்கையில் இவர்கள் வள்ளல்களை விட ஒரு வகையில் மேலும் உயர்ந்தவர்கள். மேன்மை மிக்கவர்கள் என்ற எண்ணத்தை எழச் செய்கிறது.

**ஆற்றுப்படை இலக்கியத்தின் தோற்றமும் கட்டமைப்பும்:**

ஆற்றுப்படை இலக்கியத்தைக் கலைஞர்களின் இலக்கியமாகவும் கருதலாம். மன்னன் பாட்டுடைத் தலைனாக இருந்தாலும் அவனைப் பற்றிய அனைத்துச் செய்திகளையும் பரிசில் பெற்று வரும் இரவலனே எடுத்துக் கூறுகிறான். புரவலன் பெருமையை இரவலன் பாடினான். இரவலர்கள் அனைவரும் இசை வல்லுநர்கள். ஆற்றுப்படை இலக்கியத்தின் வளர்ச்சிக்கு இவர்களே காரணம்.

பழுமரம் தேடும் பறவையினராய் எங்கோ ஒரு மன்னிடம் சென்று அசனைப் புகழ்ந்து பாடிய இரவலர்கள் தாம் பரிசில் பெற்ற வரலாற்றின் வாய்மொழி வடிவமே ஆற்றுப்படை எனலாம்.

**ஆற்றுப்படை ஒரு பண்பாட்டுக் கருவூலம்:**

“பசித்தவனுக்கு உணவை வழங்குவதை விட அதை உருவாக்கிக் கொள்ளும் வழியை அவனுக்குச் சொல்லிக் கொடுப்பதே சிறந்த அறம்” என்பது மேல் நாட்டுப் பொன்மொழி. சங்க காலத்துக் கலைஞர்களின் பண்பாட்டையும் வாழ்வையும் அவர்களை ஆதரித்துக் கலை வளர்த்த புரவலர்களின் ஈர உள்ளத்தையும், வீர நெஞ்சத்தையும் ஆற்றுப்படையின் இலக்கிய ஒவியங்களாகக் காட்டி நிறகின்றன. ‘கொடுப்பதும் அழுக்கறுப்பார்கள்’ நிறைந்த உலகில் கொடுப்பவர் இருக்கும் இடத்திற்கு வழி காட்டும் இரவலர்கள் புரவலர்களினும் உயர்ந்தவர்களாகவே கருதப்படுவர்.

**வறுமை நிலை:**

ஒருவனுக்கு வறுமையைப் போல துன்பம் தருவது எதுவென்றால் வறுமை தானே தவிர வேறொன்றும் இல்லை என்கிறார். இதனை,

"இன்மையின் இன்னாத தியாதெனின் இன்மையின்
இன்மையே இன்னா தது" (2)

என்ற குறளில் வள்ளுவர் பதிவு செய்துள்ளார். மேலும் 'நல்குரவு' எனும் ஒர் அதிகாரத்தை ஒதுக்கியது போன்று சங்க இலக்கியத்தில் வறுமை கோட்டிற்கு கீழ் இருப்பதை உணர முடிகிறது.

பத்துப்பாட்டு அறிமுகம்:

சங்கத் தொகை நூல்களுள் முதன்மையாக வைத்து எண்ணப்படும் சிறப்பு வாய்ந்தது 'பத்துப்பாட்டு' ஆகும். அகவற் பாக்களால் அமைந்த பத்துப் பாடல்களின் கோவையாகும். இதனை,

"முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக்காஞ்சி-மருவினிய
கோல நெடு நல்வாடை கோல் குறிஞ்சிபட்டினப் பாலை கடாத்தொடும் பத்து"

என்ற பழஞ்செய்யுள் பத்துப்பாட்டு நூல்கள் இன்னின்னவை என்று தெரிவிக்கின்றது.

**பொருநராற்றுப்படை ஒரு வினக்கம்:**

ஐந்து ஆற்றுப்படைகளுள் ஒன்றான பொருநராற்றுப்படை கரிகாற் பெருவளத்தானை முடத்தாமக் கண்ணியார் பாடியது. பரிசில் பெற்ற பொருநன், பரிசில் பெற விழையும் பொருநனை ஆற்றுப்படுத்தியதாக அமைந்துள்ளது.

**பொருநரின் வாழ்க்கை நிலை:**

பரிசில் பெற்ற பொருநன் 'துன்பம் மிகுந்த பசியால் வருத்தமுற்ற உனது சுற்றத்தோடு தொன்று தொட்டு வந்த பசி உன்னை விட்டு நீங்க வேண்டுமானால் இன்னும் காலம் தாழ்த்தாமல் உடனே புறப்படுக' என்று பரிசில் பெற விழையும் பொருநனை ஆற்றுப்படுத்துவதன் மூலமாக அவனது கொடுமையான வறுமை நிலையினைச் சித்திரிக்கும் பொழுது,

"ஆடுபசி உழந்தநின் இரும்பேர் ஒக்கவொடு
நீடுபசி ஒராஅல் வேண்டின் நீடின்(று)
எழுமதி" (3)

என்ற பாடலால் உணர முடிகிறது.

**கலைஞரைப் போற்றுதல்:**

'வந்தாரை வாழ வைக்கும் தமிழர்கள்' என்ற அடைமொழி 21 ஆம் நூற்றாண்டிலும், புழக்கத்தில் நிலைத்ததன் வாயிலாக விருந்தினரை அக்காலப் புரவலர்கள் எங்ஙனம் போற்றிக் காத்திருக்க வேண்டும் என்பதை அறியலாம். புரவலன் பொருள் வேண்டி வந்த கலைஞனைக் கண்ணால் பருகி, அண்மையில் அமரச் செய்து, ஊனை வெறுக்கும் அளவிற்கு உண்ணச் செய்து புத்தாடை வழங்கியதை,

"ஈரும் பேனும் இருந்து இறைகூடி
வேரொடு நனைந்து வேற்றிழை நுழைந்த
துன்னற் சிதாஅர் துவர நீக்கி
நோக்கு நுழைகல்லா நுண்மைய பூக்கனிந்து" (4)

என்ற வரிகளின் மூலம் அறிய முடிகிறது.

**பாணாற்றுப்படை ஒரு விளக்கம்:**

பாணாற்றுப்படைகளில் ஒன்றான சிறுபாணாற்றுப்படை என்னும் இலக்கியம் பத்துப் பாட்டுள் ஒன்றாகக் கோக்கப்பட்டுள்ளது. இது நல்லியக்கோடனைப் பாட்டுடைத் தலைவனுக்குக் கொண்டு இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் என்னும் சான்றோரால் பாடப் பெற்றது.

**பாணரின் வறுமை நிலை:**

பண்பாடுவோர் பாணராவார். சிறிய யாழை வாசிப்போர் சிறுபாணராவர்.சிறுபாணரை ஆற்றுப்படுத்துவது சிறுபாணாற்றுப்படையாகும். வறுமையில் வாடி நலிந்த ஒரு குடும்பத்தைச் சித்திரிக்கும் ஆசிரியர் பசியால் வாடி வருந்திய திணைமகள் ஒருத்தி வீட்டில் உணவாக்க ஒரு பொருளும் இல்லாததால் குப்பையில் பயிரான வேளைக் கீரையைக் கிள்ளி எடுத்து உப்பின்றி வேக வைத்து, வறுமையை அறியாதவர்கள் அதைப் பார்த்தால் பரிகசிப்பார்களே என்று நாணி, வாயிற்கதவைத் தாழிட்டு உன்ளே நிறைந்த சுற்றத்துடன் உட்கார்ந்து உண்டாள் என்ற செய்தியினை,

“ஒல்குபசி யுழந்த ஒடுங்குநுண் மருங்கில்
வளைக்கைத்திணைமகள் வள்ளுகிர்க் குறைந்த
குப்பை வேளை உப்பிலி வெந்ததை
மடவோர்க் காட்சி நாணிக் கடையடைத்து
இரும்பேர் ஒக்கலொடு ஒருங்குடன் மிசையும்” (5)

என்ற பாடலில் காணலாம்.

**விலங்குக்கு ஏற்பட்ட துன்பம்:**

வறுமையின் எல்லையை ஒரு நாயின் குடும்பம் வாயிலாக ஆசிரியர் பின்வரும் அடிகளில் உணர வைக்கிறார். இந்நிகழ்வினை,

“திறவாக் கண்ண சாய்செவிக்
குறளை கறவாப் பால்முலை கவர்தல்
நோனாது புனிற்று நாய்
குரைக்கும் புல்லின் அட்டில் காழ்சோர்
முதுசுவர்க் கணிச்சிதல் அரித்த” (6)

என்ற பாடலின் மூலம் மனிதர் அனுகாத காரணத்தால் நாய் அடுப்பங்ரையில் குடியிருந்து குட்டி போடுகிறது. காது சாய்ந்து கண் திறக்காத குட்டிகள் தாய் நாயின் முலையைக் கவருகின்றன. ஆனால் தாய் நாயோ பால் சுரந்து பல நாளானதால் வலி பொறுக்காமல் சேய் நாய்களைச் சினந்து குரைக்கிறது. வீட்டுச் சுவரும் கூரையும் விவரிக்க முடியாத நிலை. இங்னனம் வறுமையின் சூழல் மக்களை வாட்டுவதோடு விலங்கினங்களையும் வருத்தும் அளவிற்கு உண்டான சூழலினை அறிய முடிகிறது.

**முடிவுரை:**

தமிழரின் மரபையும், தொன்மையையும் அறிவதற்கான வரலாற்றுச் சான்றாகச் சங்க இலக்கியங்கள் திகழ்கின்றன. ‘யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்’ என்ற பரந்துபட்ட மனத்துடன் வாழ்ந்த பழந்தமிழனை அடையாளம் காட்டுவதாய் உள்ளன.

கலைஞர்களுக்குப் பண்பாடும், கலையிலும் அன்றாட வாழ்வில் கடைபிடிக்கும் தலையாய தொழிலாக விளங்கின. புலவர், பாணர், பொருநர், கூத்தர், விறலியர் போன்ற கலைஞர்கள் தமக்குள் பகைமை பாராட்டாமல் அன்பு பாராட்டி வாழ்வில் வளம் பெற ஒருவருக்கொடுவர் வழிகாட்டியதாக அமையும் உயர்ந்த பண்பாட்டை ஆற்றுப்படை இலக்கியம் காட்டுவதைக் காணலாம்.

**அடிக்குறிப்புகள்:**

1. தொல்காப்பியம் : புறத்திணையியல்-36
2. திருக்குறள் : 105
3. பொருநராற்றுப்படை : 61-63
4. பொருநராற்றுப்படை : 79-82
5. சிறுபாணாற்றுப்படை : 135-139
6. சிறுபாணாற்றுப்படை : 129-132